| Page No.6 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 27.03.2025 |
| O.S. No. | 157/2004 |
| பி.சா.2 | கண்ணகி |

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் கண்ணகி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணகி | சமயம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>12ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. வழக்கு 1வது அயிட்ட சொத்தானது, மொட்டையன் என்கிற ராமசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை, கடந்த 17.11.2004ஆம் தேதியில் 12ஆம் பிரதிவாதி கிரையம் பெற்று அவர்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு, 12ஆம் பிரதிவாதி வாடகைதாரர் என்ற முறையில் மேற்படி சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை, மொட்டையன் என்கிற ராமசாமி 1972ல் கிரையம் பெற்றார் என்றால் ஆண்டு ஞாபகமில்லை.

<u>14ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு 4வது அயிட்ட சொத்தை சகுந்தலா என்பவர் 14ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும். சகுந்தலா எனது தாயார் என்றால் சரிதான். மீனாட்சி எனது பெரியம்மா ஆவார். மேற்படி சகுந்தலா மற்றும் மீனாட்சி ஆகிய இருவரும் சேர்ந்து

தங்களது தனிப்பட்ட வருமானத்தில் வழக்கு 4வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தை 14ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு, அவர்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி மீனாட்சி மேற்சொன்ன சொத்தில் தனது பாதி பங்கை, எனது தாயாருக்கு உயில்மூலம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் ஞாபகமில்லை, சாட்சி மீண்டும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளதாக சொன்னார். மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் என்றால் சரிதான். அண்ணாமலை முதலியாரின் பணத்தின்மூலமாகத்தான் வழக்கு 4வது அயிட்ட சொத்து வாங்கப்பட்டதாக வாதி சொல்லியுள்ளது உண்மையா என்றால் இல்லை. எனது தாயார் விற்பனை செய்த சொத்தில் வாதி பாகம் கோரமுடியாது என்றால் சரிதான்.

**(வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**